1973 நவம்பர் 24]

தொலைவிலே உள்ள வந்தவாசி வழியாக சென்னையிலிருந்து நாகப் பட்டணத்திற்கும், திருச்சிக்கும் போகின்ற பேருந்துகளை மாற்றிச் செல்லச் செய்தால் அதனால் பயண நேரத்தையும் அது அதிக மாக்கும், பயணக் கட்டணத்தையும் அது அதிகமாக்கும்.

திருக்கோயிலூர்-பெங்களூர் விரைவுப் பேருந்துகள்

* 387 **வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கோயிலூரிலிருந்து பெங்களூருக்கு செல்வதற்கு அரசு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, பெங்களூர், மைசூர் மாநிலத்தில் உள்ள ஒரு அழகிய நகரம். அதைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிலேயிருந்து குறிப்பாக திருக்கோயிலூருக்கு அருகிலே யுள்ள அதிகமான கிராமங்களிலிருந்து மக்கள் செல்கிறார்கள். இப் பொழுது பெங்களூருக்கு தனியார் பஸ்கள்தான் போய்க்கொண்டி ருக்கின்றன. இட நெருக்கடி காரணமாக அவர்களும் குறிப்பிட்ட டிக்கட்டுகள் மட்டும் தான் ஏற்றுகிறார்கள். இதனால் பஸ்ஸில் இடம் கிடைக்காமல் அந்தக் கிராமங்களிலேயுள்ள மக்கள் எல்லாம் அவதிப்படுகிறார்கள். எனவே, இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது அழகிய நகரம் என்பதை நான் மறுக்கவில்லை. புதுவையி லிருந்து பெங்களூருக்குப் போகின்ற விரைவுப் பேருந்துகள், தமிழ் நாடு அரசின் சார்பிலே இரண்டு விடப்படுகின்றன ; மைசூர் மாநில போக்குவரத்து கார்ப்பரேஷன் சார்பிலே இரண்டு பேருந்துகள் விடப்படுகின்றன. அவைகளே அந்தப் பகுதிப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.